Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, MAY 22, 2024

புதன்கிழமை , மே 22, 2024 | ஒளி: 09 கதிர்: 257 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE



## வெசாக் வாரம் ஆரம்பமானது

செவ்வாய்க்கிழமை (21) ஆரம்பமான தேசிய வெசாக் வாரம் எதிர்வரும் 27ஆம் திகதி நிறைவடையும்

இந்த வருடத்துக்கான அரச வெசாக் விழாவை மாத்தளை தர்மராஜ பிரிவெனாவில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## ஜனாதிபதி ரணில் ஜூனில் அறிவிப்பார்



ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது குறித்து தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஜூன் மாதம் உத்தியோகபூர்வமாக அறிவிப்பார் என அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

### இந்தியாவின் பாதுகாப்புக்கு

# “பங்கம் ஏற்பட விடமாட்டோம்”

**அனைத்து நாடுகளுடனும் வெளிப்படையான விதத்தில் இணைந்து செயற்படவிரும்புகின்றோம்**

**விட்டுக் கொடுத்துவிட்டு ஏனையவர்களுடன் உறவுகளை பேண விரும்பவில்லை**



இந்தியாவின் தேசிய பாதுகாப்பு நலன்களை பாதுகாப்பதில் இலங்கைக்கு உள்ள அர்ப்பணிப்பை வெளிப்படுத்தியுள்ள அலிசப்ரி பொறுப்புள்ள அயல்நாடு என்ற அடிப்படையில் இந்தியாவின் பாதுகாப்பிற்கு எவரும பாதிப்பு ஏற்படுத்துவதற்கு அனுமதிக்கமாட்டோம் என தெரிவித்துள்ளார்.

இந்திய தேர்தல் ஜனநாயகத்தின் கொண்டாட்டம் தேர்தல்கள் முடிவுகள் எவ்வாறு அமைந்தாலும் இலங்கை இந்தியாவுடன் இணைந்து செயற்படவிரும்புகின்றது என குறிப்பிட்டுள்ளார்.

இந்திய ஊடகமொன்றிற்கு வழங்கியுள்ள செவ்வியிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



## 5 விபத்துக்களில் ஐவர் மரணம்

நாடளாவிய ரீதியில், ஐந்து வெவ்வேறு பிரதேசங்களில் திங்கட்கிழமை (20) இடம்பெற்ற வீதி விபத்துக்களில், பாடசாலை மாணவன் உட்பட 5 பேர் உயிரிழந்துள்ளனர்.

புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு பரந்தன் வீதியில் மூங்கிலாறு பகுதியில் உழவு இயந்திரம் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் பாடசாலை மாணவன் ஒருவன் உயிரிழந்துள்ளான்.

தொடர்ச்சி P2



## தேசிய துக்க தினம் நேற்று அனுஷ்டிப்பு

ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசியின் அகால மரணம் காரணமாக இலங்கையில், செவ்வாய்க்கிழமை (21) துக்க தினம் அனுஷ்டிக்கப்பட்டது. இலங்கையின் தேசியக்கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டிருந்தது.

தொடர்ச்சி P2



## ரவிசங்கர்-சஜித் சந்தித்துப் பேச்சு

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள உலகளாவிய சமாதானத் தூதுவர், ஆன்மீகத் தலைவர், வாழும் கலை மன்றத்தின் நிறுவனர் குருதேவ் ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கருக்கும் எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸவுக்கும் இடையிலான சந்திப்பு கொழும்பில் செவ்வாய்க்கிழமை (21) இடம்பெற்றது.

## டயனாவுக்குப் பிணை

போலியான தகவல்களை முன்வைத்து கடவுச்சீட்டை பெற்றுக்கொண்ட குற்றச்சாட்டு தொடர்பில், நீதிமன்றில் முன்னிலையான முன்னாள் இராஜாங்க அமைச்சர் டயனா கமகேவை பிணையில் விடுவிக்குமாறு புதுக்கடை நீதவான் நீதிமன்றம் செவ்வாய்க்கிழமை (21) உத்தரவிட்டது.

தலைமறைவாகி இருந்ததாகக் கூறப்பட்ட முன்னாள் இராஜாங்க அமைச்சர் டயனா கமகே, தனது

தொடர்ச்சி



## களுத்துறை துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் மரணம்



களுத்துறை கட்டுகுருந்த பிரதேசத்தில் திங்கட்கிழமை (20) இரவு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் மூன்று பிள்ளைகளின் தந்தையான அசுருமுனி தஸ்மின் மதுவந்த சில்வா (வயது 38) உயிரிழந்துள்ளதுடன் அவரது 7 வயது மகள் காயமடைந்துள்ளதாக களுத்துறை தெற்கு பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2

## ISIS சந்தேகநபர்கள் தொடர்பில் இந்திய அதிகாரிகளுடன் பேச்சு



ISIS அமைப்பின் உறுப்பினர்கள் என சந்தேகிக்கப்படும் இலங்கையர் நால்வர், இந்தியாவில் கைது செய்யப்பட்டுள்ள விவகாரம் தொடர்பில், இலங்கையின் தேசிய புலனாய்வு பிரிவு உடனடி விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இவர்கள் குஜராத்துக்கு செல்ல முற்பட்டவேளை அஹமதாபாத்தில் கைது செய்யப்பட்டமை குறித்தே விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன. இந்த விடயங்கள் குறித்து உன்னிப்பாக அவதானித்து வருவதாக பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்துள்ளார். இந்த தகவல்களை தீவிரமாக எடுத்துள்ளோம் சந்தேக நபர்கள் குறித்த மேலதிக தகவல்களை பெறுவதற்காக இந்திய அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கவுள்ளோம் என்றும் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2





## உலகத் தேயிலை தினத்தன்று பேரணி

■ உமா மகேஸ்வரி

உலகத் தேயிலை தினமான செவ்வாய்க்கிழமை (21) இரத்தினபுரி நகரில் சமூக அபிவிருத்தி நிறுவகத்தின் ஏற்பாட்டில் மாபெரும் பேரணி முன்னெடுக்கப்பட்டது.

இந்த பேரணியில் கண்டி, நுவரெலியா, பதுளை, இரத்தினபுரி, கேகாலை உள்ளிட்ட மாவட்டங்களை சேர்ந்த பெருந்தோட்ட தொழிலாளர்கள் ,சிவில் அமைப்புக்களை சேர்ந்தவர்கள் ,நகர வர்த்தகர்கள் நலன் விரும்பிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்

இரத்தினபுரி மாநகர சபை முன்றலில் ஆரம்பமான பேரணி, நகரமத்தியிலுள்ள மணிக்கூட்டு கோபுர வழியாக மீண்டும் மாநகர சபை மண்டபத்தை வந்தடைந்தது.

தொடர்ச்சி P2

## குழு மோதலில் குடும்பஸ்தர் பலி

■ ஆறுமுகம் புவியரசன்



எல்ல பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தெமோதரை, நெதர்வில் தோட்டத்தில் இரு குழுக்களுக்கிடையே திங்கட்கிழமை (20) இடம்பெற்ற மோதலில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக எல்ல பொலிஸார் தெரிவித்தனர்

இரு குடும்பங்களுக்கு இடையே நீண்ட காலமாக பகை இருந்து வந்துள்ளது.

தொடர்ச்சி P2

## “அவதானமாக செயற்படவும்”

■ ஆ.ரமேஸ், கனகராசா சரவணன்

நாடளாவிய ரீதியில் கடந்த சில தினங்களாக பெய்துவரும் அழைமழை, கடுங்காற்று, மண்சரிவு, மரங்கள் முறிந்துவிழுதல், இடிமின்னல் தொடர்பில் மக்கள் அவதானமாக இருக்கவேண்டுமென, வானிலை அவதான நிலையம் அறிவுறுத்தியுள்ளது.

மழை காரணமாக ஆறுகள்,மற்றும் குளங்களில் மழை நீர் நிரம்பியுள்ளதுடன் நீர்த்தேக்கங்கள் நீர் மட்டம் உயர்ந்து காணப்படுகிறது.

தொடர்ச்சி P2







## மக்களின் கண்ணீருடன் ஜனாஸாக்கள் நல்லடக்கம்



ஈரானிய ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி, அந்நாட்டின் வெளியுறவு அமைச்சர் ஹொசைன் அமீர் அப்துல்லாஹியன் ஆகியோரின் ஜனாஸாக்கள், வடமேற்கு ஈரானில் நல்லடக்கம் செய்யப்பட்டன என அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# ஜனாதிபதி ரணில் ஜூனில் அறிவிப்பார்

"இந்த ஆண்டு நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க போட்டியிட மாட்டார் என்று ஐக்கிய மக்கள் சக்தி உட்பட பலரால் ஒரு கதை பரப்பப்படுகிறது.

எவ்வாறாயினும், விக்கிரமசிங்க, அத்தகைய விடயத்தை முன்வைக்கும் அனைவருக்கும் ஓர்அடியை வழங்குவார், ஏனெனில் அவர் மற்றொரு பதவிக்காலத்தை கோருவார். அடுத்த மாதம் அவர் தனது வேட்புமனுவை உத்தியோகபூர்வமாக அறிவிப்பார்" என அமைச்சர் நாணயக்கார தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான ஸ்ரீகொத்தவில், செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"நாட்டின் நலனுக்காக கடினமான நேரத்தில் ஜனாதிபதி பதவியை ஏற்றுக்கொண்டதன் மூலம் விக்கிரமசிங்க தனது திறமையை நிரூபித்துள்ளார். பலர் அதைத் தவிர்த்தபோது அவர் அவ்வாறு செய்தார். இன்னும் பலர் பொறுப்பிலிருந்து ஓடிப்போய் தங்கள் அரசியல் எதிர்காலத்தை மட்டுமே நினைத்தனர்" என்று அவர் மேலும் கூறினார்.

மேலும், விக்ரமசிங்க தனியொரு கட்சியில் போட்டியிட மாட்டார் என்றும், ஜனாதிபதி தேர்தலில் பல சக்திகளை பிரதிநிதித்துவப்படுத்துவார் என்றும் அவர் கூறினார்.

இதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தியின், முல்கிரிகல அமைப்பாளர் நிமல் பிரான்சிஸ் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்புரிமையைப் பெற்றுக்கொண்டார். ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தனவிடம் இருந்து அவர் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்புரிமையைப் பெற்றுக்கொண்டார்.

இந்நிலைமையைக் குறிப்பிட்ட அமைச்சர் நாணயக்கார, கட்சியைக் கைப்பற்றுவதற்கு வெளியாட்கள் மேற்கொள்ளும் முயற்சி குறித்து ஐக்கிய மக்கள் சக்தியினர் பலர் விரக்தியடைந்துள்ளனர்.

"வியத்மகவில் இருந்தவர்கள் ஐக்கிய மக்கள் சக்தியில் சேர்ந்து கட்சியைக் கைப்பற்ற முயற்சிக்கிறார்கள். இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் ஐக்கிய மக்கள் சக்தியில் உள்ள பலர் கட்சியை விட்டு வெளியேறி வருகின்றனர்," என்றார்.

"மே தினத்தில் ஐக்கிய மக்கள் சக்தியினர், ஏன் ஐக்கிய தேசியக் கட்சியின் மேடையில் ஏறவில்லை என சிலர் எங்களிடம் கேள்வி எழுப்புகின்றனர். இருப்பினும், அத்தகைய நிகழ்வுக்கு அவசரம் இல்லை.

சரியான நேரத்தில் சேரக் காத்திருக்கும் ஐக்கிய மக்கள் சக்தி எம்பிக்கள் உள்ளனர். அவர்கள் குழுவாகவோ அல்லது தனித்தனியாகவோ இணைவார்கள். ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைவதற்கு அழைப்பு விடுக்கும் வேறு சிலரும் ஐக்கிய மக்கள் சக்தியில் உள்ளனர்.

அவர்களின் கோரிக்கை நிறைவேற்றப்படாவிட்டால் அவர்கள் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரை கைவிட்டு எங்களுடன் இணைவார்கள்" என்றும் அவர் கூறினார்.

# "பங்கம் ஏற்பட விடமாட்டோம்"

சீன கப்பல்களின் இலங்கை விஜயம் குறித்த இந்தியாவின் கரிசனை குறித்து கருத்து வெளியிட்டுள்ள அலிசப்ரி நாங்கள் அனைத்து நாடுகளுடனும் இணைந்து செயற்பட விரும்புகின்றோம் என்பதை வெளிப்படையாக தெரிவித்துள்ளோம் இந்தியாவின் பாதுகாப்பு குறித்த நியாயபூர்வமான எந்த கரிசனையும் கருத்தில் கொள்ளப்படும் நாங்கள் இந்தியாவின் பாதுகாப்பிற்கு எவரும் பாதிப்பை ஏற்படுத்த அனுமதிக்க மாட்டோம் என குறிப்பிட்டுள்ளார்.

நாங்கள் அனைத்து நாடுகளுடனும் வெளிப்படையான விதத்தில் இணைந்து செயற்படவிரும்புகின்றோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சீனா இந்தியாவின் மிகப்பெரிய வர்த்தக பங்காளியாக மாறியுள்ளமை எனக்கு தற்போதே தெரியும் எனகுறிப்பிட்டுள்ள அலிசப்ரி ஆகவே நீங்கள் அவர்களுடன் இணைந்து செயற்படவிரும்புவது போல நாங்களும் அனைவருடனும் இணைந்து செயற்பட விரும்புகின்றோம் என குறிப்பிட்டுள்ளார்.



ஆனால் இது ஏதாவது தரப்பினை விட்டுக்கொடுத்து இடம்பெறக்கூடாது ஏதாவதுதொரு தரப்பினை விட்டுக்கொடுத்துவிட்டு நாங்கள் ஏனையவர்களுடன் உறவுகளை பேண விரும்பவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆகவே பொறுப்புணர்வுள்ள அயல்நாடு நாகரீகமான சகா என்ற அடிப்படையில் இந்தியாவின் நியாயபூர்வமான பாதுகாப்பு கரிசனைகளிற்கு பாதிப்பை ஏற்படுத்தும் எந்த விடயத்திலும் நாங்கள் ஈடுபடமாட்டோம் என்பதை மீண்டும் வலியுறுத்திகூற விரும்புகின்றேன் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.



# வெசாக் வாரம் ஆரம்பமானது

இந்நிலையில், வெசாக் வாரத்தின் ஆரம்ப நிகழ்வு பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் ஆரம்பமானது.

அத்துடன் வெசாக் காலத்தில் தேவையற்ற விழாக்களை நடத்துவதை தவிர்க்குமாறு புத்தசாசன மற்றும் மத விவகார அமைச்சர் விதுர விக்ரமநாயக்க பணித்துள்ளார்.

வெசாக் பண்டிகையை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் விசேட பாதுகாப்பு வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

# "அவதானமாக செயற்படவும்"

இக்காலப்பகுதியில் அனர்த்தங்கள் ஏற்படகூடிய இடங்கள் அவதானிக்கப்பட்டால் இது தொடர்பில் அவ்வப் பிரதேச கிராம சேவை அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டுவர பொதுமக்கள் முன்வர வேண்டும் எனவும் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் தென்மேல் பருவப் பெயர்ச்சி நிலைமை படிப்படியாக தாபிக்கப்பட்டு வருகின்றமை காரணமாக தற்போது நிலவும் மழை நிலைமையும் காற்று நிலைமையும் மேலும் தொடரும் எனவும் வானிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது.

கடலில் 60-70 கிலோ மீற்றர் வரை காற்று அதிகரிக்கும். எனவே, கடலில் பயணம் செய்வோரும் மீனவ சமூகமும் அவதானமாக செயற்படுமாறும் அந்த நிலையம் அறிவுறுத்தியுள்ளது.

# 5 விபத்துக்களில் ஐவர் மரணம்

இதில் பயணித்த 6 பேர் படுகாயமடைந்து மூங்கிலாறு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். அதில், தம்பிராசபுரம், தர்மபுரம் பகுதியைச் சேர்ந்த 16 வயதுடைய பாடசாலை மாணவன் உயிரிழந்துள்ளான்.

உழவு இயந்திரத்தில் பயணித்த 14 பேர் முல்லியாவெளி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஆலயம் ஒன்றில் இடம்பெற்ற வைபவத்தில் பங்கேற்பதற்க பயணித்த போதே இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் தலைமையகம் செவ்வாய்க்கிழமை (21) அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இதேவேளை, நீர்கொழும்பு - திவுலப்பிட்டி வீதியில் முச்சக்கர வண்டி ஒன்று லொறியுடன் மோதியதில், பலந்தோட்டை பிரதேசத்தைச் சேர்ந்த 40 வயதுடைய முச்சக்கரவண்டி சாரதி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அம்பிலிபிட்டிய - நோனாகம மேரி ஹல்மில்லகெட்டிய பிரதேசத்தில் லொறி ஒன்று எதிர்திசையில் வந்த முச்சக்கர வண்டியுடன் மோதியதில் விபத்து ஏற்பட்டுள்ளது. விபத்தில் காயமடைந்த முச்சக்கரவண்டியின் சாரதியும் அதில் பயணித்த இருவர் எம்பிலிப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் முச்சக்கரவண்டியின் சாரதி உயிரிழந்துள்ளார்.

தெலிப்பலே பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அளவெட்டி - மைலோட் வீதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் 35 வயதுடைய நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளை கட்டுப்படுத்த முடியாமல் வீதியை விட்டு விலகி மின்கம்பத்தில் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. குளியாபிட்டிய - நாரம்மல வீதியின் தும்மோதர பிரதேசத்தில் மோட்டார் சைக்கிள்கள் இரண்டு மோதி விபத்துக்குள்ளானதில் 34 வயதுடைய நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

# டயனாவுக்குப் பிணை

சட்டத்தரணியின் ஊடுக நீதிமன்றில் முன்னிலையாகியிருந்தார்.

குறித்த குற்றச்சாட்டு தொடர்பில் டயனா கமகேவை சந்தேகநபராகப் பெயரிடுமாறு நீதிமன்றம் திங்கட்கிழமை (20) உத்தரவிட்டிருந்தது.

குற்றப்புலனாய்வு திணைக்களத்தினால் நீதிமன்றில் முன்வைக்கப்பட்ட விடயங்களை ஆராய்ந்த பின்னர் கொழும்பு பிரதம நீதவான் திலின கமகே இந்த உத்தரவை பிறப்பித்திருந்தார்.

இதனிடையே, முன்னாள் இராஜாங்க அமைச்சர் டயனா கமகே தொடர்பில் குற்றவியல் வழக்கு ஏற்பாடுகளின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்குமாறு சட்டமா அதிபரால் குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# குழு மோதலில் குடும்பஸ்தர் பலி




சம்பவ தினத்தன்று இரவு, ஏற்பட்ட வாக்குவாதம் கைகலப்பாக மாறியுள்ளது.

இதன் போது கட்டுமானப் பணிக்கு பயன்படுத்தபடும் ஆயுதம் ஒன்றினால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் இரண்டு பிள்ளைகளின் தந்தையான 38 வயதுடைய குடும்பஸ்தர் உயிரிழந்துள்ளார்.

தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்ட கனரக ஆயுதத்தை பொலிஸார் கைபற்றி யுள்ளனர். சந்தேகநபரையும் கைது செய்வதற்கான விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# தேசிய துக்க தினம் நேற்று அனுஷ்டிப்பு

பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு, செவ்வாய்க்கிழமையை (21) தேசிய துக்க தினமாக அறிவித்து தேசியக்கொடியை அரைக்கம்பத்தில் பறக்க விடுமாறு திங்கட்கிழமை (20) அறிவித்திருந்தது.

ஈரானின் வடமேற்குப் பகுதியில் உள்ள மலைப் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (19) ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி பயணித்த உலங்கு வானூர்தி விபத்துக்குள்ளானதில் அவர் உயிரிழந்தார்.

இந்த விபத்தில் உலங்கு வானூர்தியில் பயணித்த ஈரான் வெளிவிவகார அமைச்சர், ஈரான் ஜனாதிபதி உட்பட 8 பேர் உயிரிழந்தனர். ஈரானிய ஜனாதிபதி ரைசியின் ஜனாஸா, செவ்வாய்க்கிழமை (21) நல்லடக்கம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ISIS சந்தேகநபர்கள் தொடர்பில் இந்திய அதிகாரிகளுடன் பேச்சு



இந்த சந்தேகநபர்களின் பின்னணி குறித்து விசாரணைகளை மேற்கொள்வதற்காகவும் அவர்கள் உண்மையிலேயே ISIS சந்தேகநபர்களா என விசாரணைகளை மேற்கொள்வதற்காகவும் இந்தியாவின் புலனாய்வு பிரிவினரிடம் இலங்கை புலனாய்வு பிரிவினர் மேலதிக தகவல்களை கோரியுள்ளனர்.

இந்திய அதிகாரிகள் தகவல்களை வழங்கியதும் மேலதிக நடவடிக்கைகளுக்காக அடுத்த கட்ட விசாரணைகள் உடனடியாக ஆரம்பமாகும் என இலங்கை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டுள்ள நால்வரும் சில நாட்களுக்கு முன்னர் கொழும்பிலிருந்து சென்னை சென்று அங்கிருந்து குஜராத் சென்றுள்ளனர்.

அவர்களுக்கான அடுத்த கட்ட நடவடிக்கைகளை ஏற்பாடு செய்யும் பொறுப்பை ஏற்றிருந்த நபருக்காக காத்திருந்தவேளை இவர்கள் விமானநிலையத்தில் கைதுசெய்யப்பட்டனர் என இந்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அவர்களின் கையடக்க தொலைபேசிகளில் காணப்பட்ட உரையாடல்கள் செய்திகளை பொலிஸார் மீட்டுள்ளனர் அவர்கள் இலக்கை நோக்கி செல்வதற்கு முன்னர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என இந்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# மக்களின் கண்ணீருடன் ஜனாஸாக்கள் நல்லடக்கம்

ஈரானின் ஜோல்பா நகருக்கு அருகில் உள்ள மலைப் பகுதியில் உலங்கு வானூர்தி விழுந்து விபத்துக்குள்ளானதில், ஜனாதிபதி, வெளியுறவு அமைச்சர் உள்ளிட்ட ஒன்பது பேர், திங்கட்கிழமை (20) உயிரிழந்திருந்தனர். இந்நிலையில், ஈரானில் 5 நாட்களுக்கு துக்க தினம் அறிவிக்கப்பட்டுள்ளது.

உலங்கு வானூர்தி விழுந்து விபத்துக்குள்ளான இடத்திற்கு மிக அருகில் உள்ள பெரிய நகரமான Tabriz இல் இறுதி ஊர்வலம் நடந்தது.




# களுத்துறை துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் மரணம்

உயிரிழந்த நபர் கட்டுகுந்தா புகையிரத நிலைய வீதியில் உள்ள வீட்டில் தனது மூன்று பிள்ளைகளுடன் இரவு உணவு அருந்திக் கொண்டிருந்த நிலையில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் ரி-56 ரக துப்பாக்கியை பயன்படுத்தி துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளதாகவும் இதுவரையான விசாரணையில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் பல குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# உலகத் தேயிலை தினத்தன்று பேரணி




இந்த பேரணியில், மலையக அபிவிருத்தி நிறுவக நிரைவேற்றுப் பணிப்பாளர் பீ.முத்துலிங்கம், பேராசிரியர் விஜயச்சந்திரன், கலாநிதி ரமேஸ்,சிவில் கூட்டமைப்பு தலைவர் சமிந்த பியசேகர, உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# வீடு புகுந்து தாக்கிய கனடா வாசிகள் கைது

■ எம்.றொசாந்த்

யாழ்ப்பாணத்தில் உள்ள வீடொன்றுக்குள் அத்துமீறி நுழைந்து வீட்டில் இருந்தவர்கள் மீது தாக்குதல் மேற்கொண்டனர் என்றக் குற்றச்சாட்டில் கனடாவில் இருந்து வந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் உள்ள வீடொன்றினுள் திங்கட்கிழமை (20) அத்துமீறி நுழைந்த இருவர் வீட்டில் இருந்தவர்கள் மீது தாக்குதல் மேற்கொண்டு விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

**“ இருவரையும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.**

சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்டவர்கள் , சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததை அடுத்து ,விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் தாக்குதல் நடத்திய இருவரையும் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் கனடா நாட்டில் இருந்து விடுமுறைக்காக யாழ்ப்பாணம் வந்திருந்தார்கள் என்பதும் , கொடுக்கல் வாங்கல் பிரச்சனை காரணமாகவே இந்த தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும் பொலிஸாரின் ஆரம்பக் கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இருவரையும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# டெங்கு ஒழிப்பு வாரம் ஆரம்பம்

தென்மேற்று பருவப்பெயர்ச்சி மழை காரணமாக எதிர்வரும் நாட்களில் டெங்கு நுளம்பு பரவலில் அதிகரிப்பு ஏற்படக்கூடும் என சுகாதார அமைச்சின் தேசிய டெங்கு ஒழிப்புப்பிரிவு தெரிவித்துள்ளது.


ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் 23,000 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்புப்பிரிவின் பணிப்பாளர், விசேட வைத்திய நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்தார்.

இதனிடையே யாழ்ப்பாணம், கொழும்பு, கம்பஹா, களுத்துறை மற்றும் கண்டி ஆகிய மாவட்டங்களில் தற்போது டெங்கு பரவல் அதிகரித்து வருவதாக வைத்தியர் லஹிரு கொடித்துவக்கு தெரிவிக்கின்றார்.

மேல் மாகாணத்திலேயே அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, எதிர்வரும் 26ஆம் திகதி தொடக்கம் தேசிய டெங்கு ஒழிப்பு வாரம் பிரகடனப்ப டுத்தப்பட்டுள்ளது.

மழையுடனான வானிலையால் கொழும்பு நகரில் ஏற்படக்கூடிய டெங்கு அபாயத்தை குறைப்பதற்கான உடனடி தீர்மானத்தை எடுக்குமாறு தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.



ஜனாதிபதி மற்றும் சாகல ரத்நாயக்க ஆகியோரின் தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற, டெங்கு பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு மேற்கொள்ள வேண்டிய வேலைத்திட்டத்தின் தற்போதைய நிலை தொடர்பான கலந்துரையாடலிலேயே இந்த பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

# யாழ்.விபத்தில் இளைஞன் பலி

■ எம்.றொசாந்த்



யாழ்ப்பாணம் அளவெட்டிப் பகுதியில், திங்கட்கிழமை (20) இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில், அளவெட்டி பகுதியைச் சேர்ந்த 36 வயதான வீரசிங்கம் தயானந்தன் என்பவர் உயிரிழந்துள்ளார்.

அளவெட்டி வடக்கு செட்டிச்சோலைப் பகுதியில், வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள், மின் கம்பத்துடன் மோதி விபத்துக்கு உள்ளானது.

மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்றவர் படுகாயமடைந்த நிலையில் தெல்லிப்பபழை வைத்தியசாலைக்கு கொண்டுச் செல்லப்பட்ட போது உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தெல்லிப்பழை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தாலிக்கொடி திருட்டு

■ எம்.றொசாந்த்

யாழ்ப்பாணத்தில் பேருந்தில் பயணித்த பெண்ணொருவரின் தாலிக்கொடி திருடப்பட்டுள்ளதாக மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் ஆறுகால் மடப்பகுதியை சேர்ந்த பெண்ணொருவர், பேருந்தில் சுழிபுரம் சென்ற பின்னர் , அங்கிருந்து மீள பிறிதொரு பேருந்தில் தனது வீடு நோக்கி திரும்பிக்கொண்டிருந்த வேளையிலேயே பேருந்தில் வைத்து அவரது தாலிக்கொடி களவாடப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

**“ பெறுமதியான நகைகளை அணிந்து செல்வதை தவிர்த்துக்கொள்ளுமாறு அறிவுரை**

அதேவேளை பேருந்து பயணங்களின் போது பெறுமதியான நகைகளை அணிந்து செல்வதனை தவிர்த்து கொள்ளுமாறும் , பேருந்தில் சந்தேகத்திற்கு இடமான முறையில் பயணிப்பவர்கள் தொடர்பில் அவதானமாக இருக்குமாறு பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர்.



# “காஸா மக்களுக்காக முன்நிற்க வேண்டும்”

காஸா பகுதியில் நடந்து வரும் அழிவு குறித்து பாராளுமன்றத்திற்கு வெளியேயும் உள்ளேயும் நான் குரல் கொடுத்தேன். இந்த இரு நாடுகளும் சகோதரத்துவத்துடனும் நல்லிணக்கத்துடனும் வாழ வேண்டும் என்று நம்புகிறேன். என்று எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலில் பெஞ்சமின் நெதன்யாகு பிரதமரின் அரசாங்கம், தமது அரசாங்கத்தின் கடும்போக்காளர்களுடன் இணைந்து பாலஸ்தீனம் முழுவதையும் தரைமட்டமாக்கும் அரச பயங்கரவாதக் கொள்கையை செயல்படுத்தி வருகிறது. இந்த மிலேச்சத்தனத்தை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம் என்றும் தெரிவித்துள்ளார்.

பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப வேலைத்திட்டத்தின் கீழ், 194 ஆவது கட்டமாக 1,177,000 இலட்சம் ரூபாய் பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள் களுத்துறை, பாணந்துறை அலவியா முஸ்லிம் மகா வித்தியாலயத்திற்கு வழங்கி வைக்கும் நிகழ்வு மே 20 ஆம் திகதி இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இஸ்ரேல் பிரதமரின் பெயரை குறிப்பிட நான் அஞ்சவில்லை. ஏனென்றால் அவருடைய தலைமையில் அரச பயங்கரவாதம் அரங்கேற்றப்பட்டு வருகிறது. முழு பாலஸ்தீன பூமியையும் தரைமட்டமாக்கும் கொள்கைக்கு என்னால் உடன்பட முடியாது என்றும் கூறினார். .

நான் சொல்ல வேண்டியதை நேரடியாக முகத்துக்கு முன்பே சொல்விடுவேன். எம்மைப் போன்ற நாடுகள், சமூகங்கள் இது குறித்து வெளிப்படையாக பேசும் போது, இந்த படுகொலையை தடுத்து நிறுத்த வேண்டும் என்று நெதன்யாகு அரசாங்கத்திற்கு புரியவரும் என நான் நினைக்கிறேன். ஒரு நாட்டை உருவாக்குவதற்கான சர்வதேச நிபந்தனைகள் இருக்கின்றன. அதில் ஒன்றுதான் எல்லையாகும் என்றார்.

அரசாங்கமொன்று அமைய வேண்டும் அதாவது ஆட்சி நிர்வாகம் ஒன்று இருக்க வேண்டும். மற்றுமொன்று தான் அ அங்கு மக்கள் இருக்க வேண்டும். எனக்கு தெரிந்த வரையில் நாடொன்றை, தேசமொன்றை உருவாக்குவதற்கான நிபந்தனைகளில் ஒன்றை முழுமையாக இல்லாமலாக்கப் போகின்றனர்.

நிலத்தை மிகுதப்படுத்தி பலஸ்தீன மக்களை நேரடியாக இல்லாதொழிக்க, துரத்த, மரணிக்கச் செய்கின்றனர். பலஸ்தீன நாட்டை உருவாக்க முடியாது, இங்கு மக்கள் இல்லையே என்ற அப்போது கூற முடியும். இதற்காக நாம் மேற்கொள்ள முடியுமான சாத்தியமான விளைவுகளை ஏற்படுத்தும் அழுத்தங்களை தலையீடுகளை மேற்கொள்ள வேண்டும். இதற்காக அனைவரும் ஒன்றிணைய வேண்டும்.

எனவே, பலஸ்தீன மக்களை அழிக்கும் இந்த அரச பயங்கரவாதத்தை, அரச மிலேச்சத்தனத்தை இஸ்ரேலின் பெஞ்சமின் நெதன்யாகுவின் இந்த படுமோசமான நடவடிக்கையை தோற்கடிக்க, முஸ்லிம் உலகு மாத்திரமல்ல மனிதநேயம் தெரிந்த, இன,மத, குலம், கோத்திரம், கட்சி அல்லது பிற வேறுபாடுகள் இருந்தால் அவற்றையெல்லாம் களைந்து நாமனைவரும் மனிதாபிமானம் என்ற பெயரில் ஒன்றாக இணைய வேண்டும் நான் இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இங்கு மேலும் தெரிவித்தார்.






# “மலையக மக்களின் கனவை நனவாக்குவோம்”

வரக்காப்பொலை தமிழ் சமூக அபிவிருத்தி பேரவையின் ஆறாவது வருட பூர்த்தி விழா கொழும்பு மகாவலி கேந்திர மையத்தில் சனிக்கிழமை (18) இடம்பெற்றது.

“மலையக மக்களின் கனவை நனவாக்குவோம்” என்ற தொனிப்பொருளில் இந்நிகழ்வு இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.






# இலவச கணினி கல்வி நிலையம் திறப்பு

■ எம். எஸ். எம். நூர்தீன்

காத்தான்குடியில் DP Education எனப்படும் தம்மிக பெரேரா இலவச கணினி கல்வி நிலையம் திங்கட்கிழமை (20) திறந்து வைக்கப்பட்டது

நினைவுக் கல்லும் திரை நீக்கம் செய்யப்பட்டதுடன் மரக்கன்றுகள் நடப்பட்டன. அத்துடன், அந்தநிலையத்தில் இலவசமாக கல்விக் கற்கவுள்ள மாணவர்களுக்கு அனுமதி அட்டைகள் வழங்கி வைக்கப்பட்டன

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பாராளுமன்ற உறுப்பினரும் DP Education கல்வி நிறுவனத்தின் தவிசாளரும், இலங்கையின் பிரபல வர்த்தகரும் முன்னாள் அமைச்சருமான தம்மிக்க பெரேரா, மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சாஹீர் மௌலானா கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் கலாநிதி எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் காத்தான்குடி பிரதேச செயலாளர் உதய சிறீதர் காத்தான்குடி கோட்டக் கல்வி அதிகாரி ஹக்கீம் காத்தான்குடி நகர சபை முன்னாள் தவிசாளர் அஸ்பர் உட்பட பிரமுகர்கள் முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.



# மாணவனை காணவில்லை

■ ஏ.எம். கீத்



திருகோணமலை மாவட்டத்தின் மொறவெவ பொலிஸ் பிரிவில் உள்ள ரொட்டவெவ பகுதியில் உள்ள மசூட் அஸ்மட் வயது(15) எனும் மாணவனை வியாழக்கிழமை (16) முதல் காணவில்லை என மொரவெவ பொலிஸில் சனிக்கிழமை (18) முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அறபு மத்ரசாவில் இருந்து 10.05.2024 அன்று ரொட்டவெவ கிராமத்துக்கு வருகை தந்திருந்த நிலையில் காணாமல் போயுள்ளார் என்றும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மனைவியைக் கொன்ற கணவன் கைது

■ ஆறுமுகம் புலியரசன்

பசறை, லுணுகலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஜனாதாபுர , தம்பிட்டியவத்த பகுதியில் திங்கட்கிழமை (20) சடலமாக மீட்கப்பட்ட பெண்ணின் கொலைக்கு காரணமானவர் என்ற சந்தேகத்தில் அப்பெண்ணின் கணவர் கைது செய்யப்பட்டுள்ளதாக லுணுகலை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

குறித்த பெண்ணின் சடலம் லுணுகலை ஜனதாபுர , தம்பபிட்டிய வத்த, கும்புக்கன் ஓயாவில் இருந்து மீட்கப்பட்டது. இரு பிள்ளைகளின் தாயான 38 வயதுடைய பெண்ணின் தலையில் பலத்த காயம் காணப்பட்டதுடன் , தனது தாயின் மரணத்தில் சந்தேகம் உள்ளதாக 17 வயதுடைய மூத்த மகள் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்தார்.

இந்நிலையில், கொலையாளியான சந்தேகநபரை, வாடகைக்கு அமர்த்திய முச்சக்கர வண்டியின் சாரதி(36 வயது ) பிரதேசத்தில் இருந்து தப்பிச் சென்ற நிலையில் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பின்னர், சந்தேக நபரான 45 வயதான கணவன், தலைமறைவாகி இருந்த நிலையில் லுணுகலை நகரில் வைத்து அன்றிரவே கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடம் மேற்கொள்ளப் பட்ட ஆரம்பக் கட்ட விசாரணையின் போது முதலில் சிறிய கல் ஒன்றினால் தலை பகுதியை தாக்கியதன் பின்னர் பெரிய கல் ஒன்றினால் தாக்கி கொலைச் செய்ததாக பொலிஸாரிடம் வாக்குமூலம் அளித்துள்ளார். இருவருக்கும் இடையே மிக நீண்ட காலமாக குடும்ப தகராறு காணப்பட்டதாகவும் இருவருக்கும் இடையே விவாகரத்து வழக்கு நடைபெற்று வருவதாகவும் பெண்ணின் வீட்டு பகுதிக்கு குறித்த நபர் செல்ல கூடாதென நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

விசாரணைகள் நிறைவடைந்ததன் பின்னர் சந்தேக நபரையும், முச்சக்கர வண்டியின் சாரதியையும் பசறை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

**அடுக்குமாடி வீடு விற்பனைக்கு உள்ளது**
**கொழும்பு 08, எல்விட்டிகல வீடமைப்புத் தொகுதியில்**

**2வது மாடி அடுக்குமாடி குடியிருப்பு**
**(லிஃப்ட் வசதி இல்லை)**

அம்சங்கள்:–

- எல்விட்டிகல மாவத்தை பிரதான வீதிக்கு முகப்பாக கொண்டது
- குளிரூட்டப்பட்ட மாஸ்டர் படுக்கையறை.
- இரண்டு படுக்கையறைகள்
- பொதுவான கழிப்பறை
- விசாலமான வரவேற்பறை / சாப்பாட்டறை
- பேன்ட்ரி பொருத்தப்பட்ட
- ஒற்றை கட்ட (Single Phase) மின் இணைப்பு
- நீர் விநியோக இணைப்பு
- தரைப் பகுதி தோராயமாக 850 சதுர அடி
- அதே கட்டிடத்தின் கீழ் தளத்தில் மளிகை மற்றும் பிற கடைகள்
- மதிப்புமிக்க பள்ளிகள் மற்றும் முதன்மையான வணிக நிறுவனங்களை அணுகுவதற்கு ஏற்றதாக அமைந்துள்ளது

தொடர்புக்கு
**077 743 4310 / 076 196 1757**

# சுகாதார முன்னேற்பாடுகளை முன்னெடுப்பதே சால சிறந்தது

நமது நாட்டில் கடந்தகாலங்களில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் சிலவற்றை பார்க்குமிடத்து, "வெள்ளம் வடிந்தோடியதன் பின்னர் அணைக்கட்டும் செயற்பாடுகளே முன்னெடுக்கப்பட்டுள்ளன" தற்போது கடுமையான மழை பெய்துக்கொண்டிருக்கின்றது. வறட்சியான காலநிலையின் போது, வீட்டுத்தோட்டங்கள் மற்றும் சுற்றாடலை சுத்தம் செய்வதற்கு வலியுறுத்தாத தரப்பு, மழைக்குப் பின்னர் டெங்கு நுளம்புகள் பெருகியதன் பின்னரே, சிரமதான நடவடிக்கையை முன்னெடுக்க வலியுறுத்தும்.

எம்மில் பெரும்பாலானவர்களும், யாராவது கூறும் வரையில்தான் காத்திருப்பார்கள், அதற்கு முன்னரே டெங்குநுளம்பு பெருகி, டெங்கு காய்ச்சலை உண்டுபண்ணிவிடும். அதேபோல, மண்சரிவு, வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதன் பின்னரே, அணைக்கட்டும் நடவடிக்கைகளை முன்னெடுக்கும். இவையெல்லாம், காலம்கடந்த ஞானமாகும். எனினும், ஒவ்வொரு பருவகாலங்களின் பின்னரும் அதே பல்லவியே பாடப்படுகின்றது.

அரசாங்கம், அரசசார்பற்ற நிறுவனங்கள், பொது அமைப்புகள் இன்றேல், அதிகாரத்தை கொண்டிருக்கும் திணைக்களங்கள், அதிகார சபைகள் அறிவுறுத்தும் வரையிலும் காத்திருக்காமல், கடந்தகால படிப்பினைகளை பாடமாகக்கொண்டு, முன்னேற்பாடுகளை செய்துக்கொள்வதற்கு ஒவ்வொருவரும் முன்வரவேண்டும். டெங்கொழிப்பு பணிகள் மட்டுமன்றி, கொரோனாவில் இருந்தும் தற்பாதுகாத்துக்கொள்வதற்காக, சுகாதார வழிமுறைகளை கடைப்பிடிக்க வேண்டும்.

தென்மேற்கு பருவப்பெயர்ச்சி மழை காரணமாக எதிர்வரும் நாட்களில் டெங்கு நுளம்பு பரவல் அதிகரிப்பு ஏற்படக்கூடும் என சுகாதார அமைச்சின் தேசிய டெங்கு ஒழிப்புப்பிரிவு தெரிவித்துள்ளது.

ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் 23,000 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். எதிர்வரும் 26ஆம் திகதி தொடக்கம் தேசிய டெங்கு ஒழிப்பு வாரம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் பல நாடுகளில் பரவியபோது, விமான நிலையங்களை மூடிவிட்டால், கொரோனா நாட்டுக்குள் நுழைவதை முற்றாக தடுத்துநிறுத்திவிடலாம் என எதிர்க்கட்சிகள் கூறிய அறிவுரையை அன்று ஆட்சியில் இருந்தவர்கள் செவிசாய்த்து இருந்திருந்தால், பொருளாதார ரீதியில் பாரியளவில் பாதிப்புகளை சந்தித்திருக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்காது. எனினும், தீவுக்கு நுழைந்துகொண்ட கொரோனா, ஓர் ஆட்டத்தை ஆடிவிட்டு சென்றுவிட்டது. இதனால் ஏற்பட்ட பொருளாதார பாதிப்பை இன்னுமே கட்டியெழுப்பமுடியாத நிலைமையொன்று ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில்தான் கொரோனா வைரஸ் பாதிப்பு கணிசமாக அதிகரித்ததை அடுத்து முகக்கவசங்களை அணிந்து சுகாதார நடைமுறைகளை பின்பற்றுமாறு, சிங்கபூர் அரசாங்கம் அந்நாட்டு மக்களுக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளது. சிங்கபூருக்கும் இலங்கைக்கும் இடையில் நேரடி விமானச்சேவைகள் இடம்பெறுவதால், கூடுதலான பயணிகள் இலங்கையில் இருந்தும் பயணிப்பர். இலங்கையில் தரித்து வேறு நாடுகளுக்கும் செல்வர். ஆகையால், சுகாதார நடைமுறைகளை நாமும் பின்பற்றுவதே சிறந்தது.

கொரோனாவால் ஏற்பட்ட பொருளாதார பாதிப்பு உலகின் சில பகுதிகளில் இன்னும் சரியாகவில்லை.

சுகாதார நடைமுறைகளை பின்பற்றினாலும் தனிநபர்கள் முழு ஒத்துழைப்பு அளித்தால் மட்டுமே கொரோனா பரவலை கட்டுப்படுத்த முடியும் ஆகையால், வருமுன் அணைக்கட்டவேண்டிய பொறுப்பு பொதுமக்களின் கைகளிலேயே உள்ளது.



## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுத்துகளையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk





## வாழ்வியல் தரிசனம்

எந்த ஓர் ஊழியர்களும் தாங்கள் பணி செய்யும் அலுவலகத்தில் தங்களுக்கு உரிய கௌரவத்தையே முதல்கண் விரும்புகின்றனர்.

நிறுவனத் தலைவர், உயர்பதவியில் உள்ளோர் தங்கள் ஊழியர்களை அடிமை நிலையில் வைத்திருந்தால் எவர்தான் அதனை விரும்புவார்கள்?

சம்பளத்தைவிட சுய கௌரவமே முதலானது என ஒவ்வாருவரும் எதிர்பார்ப்பது நியாயமானது.

அலுவலகத்தில் பேதமற்ற நிலையில் பணியாளர்களை நடத்தினால் சேவைகள் சந்தோஷமாக நடைபெற்றபடி அமையும். எவரையும் ஒதுக்காது, பொறுமையுடனும் அன்புடனும் நடாத்தினால், இது எமது நிறுவனம் எனும் மனப்பான்மை ஊழியர்களுக்கும் உருவாகிவிடும்.

அடக்குமுறை, அதிகாரத்தினைத் தவறாக கையாண்டால் அது நீதிக்குப் புறம்பானது என்றே நோக்கப்படும். தொழிலில் மேற்பார்வை அவசியம். கட்டுப்பாடுகளும் வேண்டும். இவற்றை சாதூர்யமாகக் கையாளவேண்டும். சகலருக்கும் கடமையில் நேர்மை முக்கியம்.

– பருத்தித்துறை பால– வயிரவநாதன்

# ஜனாதிபதி தேர்தலில் தமிழ் மக்கள் என்ன செய்வார்கள்



எம்.எஸ்.எம்.ஐயூப்

இம் முறை ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளை முன்கூட்டியே அனுமானிப்பது மிகவும் கடடினமானதாக இருக்கிறது.

பொருளாதார நெருக்கடியின் காரணமாக 2022 ஆம் ஆண்டு ஏற்பட்ட மக்கள் போராட்டத்தை அடுத்து பிரதான அரசியல் கட்சிகளுடனான வாக்காளர்களின் மரபு ரீதியிலான தொடர்புகள் சிதறடிக்கப்பட்டுள்ளமையே அதற்குக் காரணமாகும்.

பொருளாதார நெருக்கடியின் காரணமாக மக்கள் தத்தமது வீடுகளில் சந்தித்த கஷ்டங்களும் அதன் எதிரொலியாக வீதியில் இறங்கிய இலட்சக் கணக்கான மக்கள் இது வரை நாட்டை ஆட்சி புரிந்த சகல அரசாங்களுக்கும் எதிராக எழுப்பிய சுலோகங்களும் பெரும்பாலான மக்கள் மத்தியில் புதியதோர் அரசியல் சிந்தனையை உருவாக்கியிருக்கிறது.

பொருளாதார பிரச்சினைகளினதும் அதன் அரசியல் பிரதிபிம்பமான மக்கள் எழுச்சியினதும் தாக்கம் எவ்வகையானது என்றால் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் 52.25 வீத வாக்குகளைப் பெற்ற ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணிக்கு 10 வீத வாக்குகளாவது கிடைக்காது என்று சில கருத்து கணிப்புக்களின் மூலம் தெரியவந்துள்ளது. பொதுஜன முன்னணியும் அக்கருத்துக் கணிப்புக்களின் பெறுபேறுகளை நிராகரிக்கவில்லை.

அதேபோல், அந்த ஜனாதிபதித் தேர்தலின் போது வெறும் 3 வீத வாக்குகளைப் பெற்ற மக்கள் விடுதலை முன்னணி அக்கருத்துக் கணிப்புக்களில் முன்னணியில் நிற்கிறது. அக்கட்சி எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறும் என்றும் பலர் கருதுகின்றனர்.

எனவே தான் வீட்டுக்குள்ளிருந்து பொருளாதார நெருக்கடியும் வீதியிலிருந்து மக்கள் எழுச்சியும் மக்கள் மனதில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தி அவர்களுக்கும் அரசியல் கட்சிகளுக்கும் இடையிலான மரபு ரீதியிலான தொடர்புகளை சிதறடிக்கச் செய்துள்ளதாக குறிப்பிட்டோம்.

இதன் விளைவாக மக்கள் விடுதலை முன்னணி போன்ற கட்சிகளின் உறுப்பினர்களின் மனதில் புதிய எதிர்ப்பார்ப்புக்கள் தோன்றியுள்ளதோடு நாளையைப் பற்றிய நிச்சியமற்றத்தன்மை அரசியல் களத்தை முழுமையாக ஆட்கொண்டுள்ளது. அதனால், இன, மத, சாதி, போன்ற இன்னோரன்ன வேறுபாடுகளை ஒதுக்கித் தள்ளிவிட்டு சகலரையும் அணுக அரசியல்வாதிகள் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். சமூகத்தில் சகல குழுக்களினதும் அரசியல் பெறுமதி இதன் மூலம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடியின் விளைவான கஷ்டங்களை தாமும் எதிர்க்கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டாலும் 2022 ஆம் ஆண்டு மக்கள் எழுச்சி உள்ளிட்ட தென் பகுதி அரசியலின் தாக்கங்களை வடக்கு கிழக்கு வாழ் தமிழ் மக்கள் மிகவும் அரிதாகவே உணர்கின்றனர்.

பொருளாதார நெருக்கடியின் உச்சக் கட்டத்தில் நாடெங்கிலுமிருந்து வந்த இலட்சக் கணக்கான மக்கள் "கோட்டா கோ ஹோம்" என்று கூச்சல் எழுப்பி கொழும்பு வீதிகளை அதிரச் செய்த போதும் அந்த அசியலால் தமிழ் மக்கள் அள்ளுண்டு போகவில்லை.

அரசியலென்று வரும் எந்தவொரு விடயத்தோடும் இனப்பிரச்சினையை முடிச்சுப் போட்டு தமது நிலைப்பாட்டை முன்வைக்கும் தமிழ் மக்கள் கோட்டாபய ராஜபக்ஷவின் அரசாங்கத்துக்கு எதிரான மக்கள் எழுச்சி மற்றும் முறைமை மாற்றம் (system change) தொடர்பான மக்களின் வேள்வியோடும் அதனை முடிச்சு போட்டனர். அரச படைகளுக்கும் தமிழ் ஈழ விடுதலை புலிகளுக்கும் இடையிலான போர் நடைபெற்ற காலத்தில் தாம் எதிர்நோக்கிய நிலைமையையும் தென் பகுதி மக்கள் அதனை கண்டுகொள்ளாமையையும் சுட்டிக் காட்டி பெரும்பாலான தமிழ் மக்கள் தென் பகுதி போராட்டங்களிலிருந்து தம்மை ஒதுக்கிக்கொண்டனர்.

அதன் பிரகாரம் எந்தவொரு சிங்கள அல்லது தென்பகுதி வேட்பாளருக்கும் வாக்களிப்பதில்லை என்றதொரு பொது உடன்பாட்டுக்கு வட பகுதி மக்களில் பெரும்பாலானவர்கள் வந்துள்ளனர். ஆனால் அந்த இணக்கப்பாட்டை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்ற விடயத்தில் கடந்த ஆறு மாதங்களாக அவர்களிடையே முரண்பாடுகள் வளர்ந்துள்ளன.

சிங்கள வேட்பாளர்களை நிராகரிக்க வேண்டும் என்று வாதிடுவோர் மத்தியில் இரண்டு பிரதான குழுக்கள் இருக்கின்றன. ஒரு குழவினர் வெற்றி பெறுவதற்கான வாய்ப்பே இல்லை என்றாலும் ஜனாதிபதித் தேர்லின் போது சகல தமிழ் கட்சிகளும் ஒன்றிணைந்து பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்த வேண்டும் என்கின்றனர். மற்றைய குழுவினர் ஜனாதிபதித் தேர்தலை தமிழ் மக்கள் பகிஷ்கரிக்க வேண்டும் என்று வாதிடுகின்றனர்.

இந்த விவாதம் கடந்த டிசெம்பர் மாதமே ஆரம்பிக்கப்பட்டது. "மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி" (ஈபிஆர்எல்எப்), தமிழீழ விடுதலை இயக்கம் (டெலொ), தமிழ் ஈழ மக்கள் விடுதலை கழகம் (புளோட்),தமிழ் தேசிய கட்சி மற்றும் ஜனநாயக போராளிகள் ஆகிய ஐந்து கட்சிகளின் கூட்டமைப்பான ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி தமிழ் பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்த வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளது.

தமிழ் மக்கள் தமிழ் வேட்பாளர் ஒருவருக்கு வாக்களிக்க ஒருமித்து முடிவு செய்தால் தென் பகுதி வேட்பாளர்கள் தமிழர்களின் நிகழ்ச்சி நிரலுக்குள் இழுக்க முடியும் என்று ஈபிஆர். எல்எப் தலைவர் சுரேஷ் பிரேமசந்திரன் கூறியிருந்தார்.

அதனை எதிர்க்கும் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் தலைமையிலான தமிழ் தேசிய மக்கள் முன்னணி தமிழ் மக்கள் ஜனாதிபதித் தேர்தலை பகிஷ்கரிக்க வேண்டும் என்று கூறுகிறது.

பிரதான தமிழ் கட்சியாக கருதப்படும் இலங்கை தமிழரசு கட்சி இந்த விடயத்தில் உத்தியோக பூர்வமாக எவ்வித முடிவையும் இதுவரை அறிவிக்காத போதிலும் அக்கட்சியைச் சேர்ந்த தலைவர்கள் பல்வேறு கருத்துக்களை தெரிவிக்கின்றனர். தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் இந்த சர்ச்சையின் ஆரம்பத்தில் கருத்து தெரிவிக்கையில் ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டதன் பின்னரே தாம் இவ்விடயம் தொடர்பாக முடிவு எடுப்பதாக தெரிவித்து இருந்தார்.

ஆனால், இலங்கை தமிழரசு கட்சியைச் சேர்ந்த மூத்த தலைவர் சி.வி.கே.சிவஞானம் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது விஷப் பரீட்சை என்று கூறியிருக்கிறார். தமிழ் வாக்குகள் பிரிந்துள்ள நிலையில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவர் தமிழ் மக்களின் மொத்த வாக்குகளைப் பெற முடியுமா? என்பதே அவரது கேள்வியாகும்.

இதேவேளை, தமிழரசு கட்சியின் தலைவராக அண்மையில் தெரிவு செய்யப்பட்டு பின்னர் நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் அப்பதவி இடைநிறுத்தப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தமிழ் பொது வேட்பாளர் காலத்தின் தேவை என்று கூறியிருக்கிறார். தமிழரசு கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம் கடந்த டிசெம்பர் மாதம் ஒரு வித்தியாசமான கருத்தை தெரிவித்து இருந்தார். தமிழ் பொது வேட்பாளர் என்ற கருத்தின் பின்னணியில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவே இருக்கிறார் என்பதே அவரது கருத்தாகும்.

இம் முறை ரணில் விக்ரமசிங்க, மொட்டுக் கட்சியின் ஆதரவிலேயே ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்குவார் என்றும் எனவே, அவருக்கு தமிழர்களின் ஆதரவு கிடைக்காது என்றும் இந்த நிலையில் தமக்கு கிடைக்காத தமிழ் வாக்குகள் வேறெந்த வேட்பாளருக்கும் போகாது தடுக்கும் நோக்கில் தமிழ் பொது வேட்பாளர் விடயம் கையிலெடுக்கப்பட்டு இருக்கலாம் என்றும் அவர் கூறியிருந்தார்.

வட மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தமிழ் பொது வேட்பாளர் என்ற கருத்து முன்வைக்கப்பட்ட உடனேயே அதனை ஏற்றுக்கொண்டது மட்டுமல்லாமல் தாம் அப்பொது வேட்பாளராக போட்டியிடவும் தயார் என்றும் கூறியிருந்தார்.

இவர்கள் அனைவரும் தமது முடிவை நியாயப்படுத்த கூறும் காரணம் ஒன்றாகும். இது வரை காலமும் ஜனாதிபதிகள், தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதாக கூறி பதவிக்கு வந்து பின்னர் தமிழ்களை ஏமாற்றியுள்ளனர். எனவே, தென்னிலங்கை அரசியலை நிராகரிப்பதாக உலகுக்கு தாம் எடுத்துக் கூற வேண்டும் என்பதே அந்தக் காரணமாகும்.

இந்த நோக்கத்தை தமிழ் வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதன் மூலம் அடைய முடியுமா அல்லது தேர்தலை பகிஷ்கரிப்பதன் மூலம் அடைய முடியுமா என்பது தொடர்பாகவே இப்போது விவாதம் நடைபெறுகிறது. அதேவேளை தேர்தலுக்கு முன்னர் தமிழ் தலைவர்களால் இது தொடர்பாக ஓர் இணக்கப்பாட்டுக்கு வர முடியுமா என்பதும் சந்தேகமான விடயமாகும்.

அவ்வாறான நிலையில் இரு சாராரும் தத்தமது நிலைப்பாட்டின் படி செயற்பட்டாலும் பொது வேட்பாளரை நிறுத்தினாலும் இரகசிய வாக்கெடுப்பு நடைபெறுவதால் தென் இலங்கை வேட்பாளர்களுக்கு வாக்களிக்கும் தமிழ் மக்களுக்கு அது தடையாகாது. ஆனால் தேர்தலை பகிஷ்கரிப்பதற்கு தமிழ் தலைவர்களிடையே இணக்கம் ஏற்பட்டால் வாக்குச் சாவடிகள் வெறிச்சோடிப் போகும் நிலை ஏற்பட்டால் அவர்களும் வாக்குச் சாவடிகளுக்குப் போகாதிருக்கலாம். அது தேசிய ரீதியில் மட்டுமன்றி சர்வதேச ரீதியிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடும்.

தமிழ் மக்கள் தேர்தலை பகிஷ்கரிக்காத நிலையில் அவர்கள் எவருக்கு வாக்களிததாலும் வெற்றி பெறும் வேட்பாளர் எடுக்க வேண்டிய வாக்கு எண்ணிக்கை அதிகரிக்கும். எனவே, பெரும்பாலான தமிழர்கள் தமக்கு வாக்களிக்க மாட்டார்கள் என்று நினைக்கும் தென் இலங்கையின் பிரதான வேட்பாளர்கள் தமிழர்கள் தேர்தலை பகிஷ்கரிப்பதையே விரும்புவர்.

## கடிதங்கள்

### வெள்ளை ஈ தாக்கம் அதிகரிப்பு

வவுனியாவில் பல பகுதிகளில் தென்னைமரங்களில் வெள்ளை ஈ தாக்கம் அதிகரித்து தேங்காய் உற்பத்தி குறைந்துள்ளதால் செய்கையாளர்கள் பெரும் அசெகரியத்திற்கு முகங்கொடுத்து வருவதாக தெரிவித்துள்ளனர்.


இந்நிலையில், வவுனியா முருகனூர் பகுதியில் உள்ள விவசாயி ஒருவரின் பண்ணையில் உள்ள தென்னை மரமொன்றில் வெள்ளை ஈயை கட்டுப்படுத்தும் நுண்ணங்கி விட்டு கட்டுப்படுத்தும் முறை தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் விவசாய போதனாசிரியர்களுக்கும் இது தொடர்பாக விளக்கம் அளிக்கப்பட்டது.

**ஈ தாக்கத்தினால் தென்னையில் இருந்து போதியளவான வருமானத்தை ஈட்டிக்கொள்ள முடியவில்லை என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.**

மேலும், வெள்ளை ஈ தாக்கம் பற்றி உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தி தீர்வு பெற்று தர வேண்டுமென செய்கையாளர்கள் கோரிக்கை விடுக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

– க. அகரன்





இலங்கையில் பல மதத் தலங்களின் வரலாறு

# எப்படி அழிக்கப்படுகிறது?



ஜே.ஏ. ஜோர்ஜ்

ஒவ்வொரு வருடமும் கார்த்திகை மாதம் பூரணை தினத்துடன் ஆரம்பமாகும் சிவனொளிபாதமலை பருவக்காலம், மே மாதம் பூரணை தினத்துடன் நிறைவடையும். இவ்வருடமும் மே மாதம் 23, 24 ஆம் திகதிகளுடன் சிவனொளிபாதமலை பருவக்காலம் நிறைவடைகின்றது. பருவக்காலம் நிறைவடைந்தாலும், அதன் ஆரம்பம் எவ்வாறு சிதைக்கப்பட்டுள்ளது என்பது பலருக்கும் தெரியாது.

"அதோ தெரிகிறதே முக்கோண வடிவ மலை, அங்கு நான் சிறுவயது முதல் பல தடவைகள் சென்று வந்திருக்கின்றேன். அங்கு அதிகாலையில் சூரிய உதயத்தை பார்த்துக்கொண்டே சிவனை வழிபடுவதில் எனக்கு அவ்வளவு ஆசை. அதனால் சிரமமம் பாராது பல தடவைகள் அங்கு சென்று வந்துவிடுவேன். ஆனால், இப்போது சில வருடங்களால் அங்கு செல்ல எனது உடல் ஒத்துழைப்பதில்லை" என்று சிவனொளிபாத மலையை நோக்கி பார்த்தவாறு, ஆசுவாசப் பெருமூச்சு விடுகிறார் சின்னசாமி.

சின்னச்சாமியின் வயது இப்போது 70துக்கும் அதிகம். அவரின் தந்தை பெரியசாமி 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் திருநெல்வேலியில் இருந்து மஸ்கெலியாவில் தேயிலைத் தோட்டம் ஒன்றில் வேலை செய்ய கங்காணி ஒருவரால் கூட்டி வரப்பட்டவர். அவரின் மகன் தான் சின்னசாமி.

"உலகில் எங்கும் இல்லாத வகையில் சிவ வழிபாடும், ஒளி வழிபாடும், பாத வழிபாடும் ஒருங்கே அமைந்துள்ளதால் தான் இந்த இடம் சிவன் ஒளி பாதம் என்ற பெயரால் அழைக்கப்படுகின்றது" என்று தனது பழைய நினைவுகளை சின்னசாமி எம்முடன் பகிர்ந்துகொள்கிறார்.

உலகில் நான்கு மதங்களைச் சேர்ந்தவர்கள் ஒரே இடத்தை சர்ச்சையின்றி வணங்கிச் செல்லும், சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களுக்கிடையிலான எல்லையில் கடல் மட்டத்திலிருந்து 2,243 மீட்டர் (7,359 அடி) உயரமான கூம்பு வடிவில் அமைந்துள்ள சிவனொளிபாத மலை, இலங்கையில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தாக உள்ளதுடன், "ஶ்ரீபாத" என சிங்கள மக்களாலும் "Adam's Peak" என ஆங்கிலத்திலும் அழைக்கப்படுகின்றது. சிவனொளிபாத மலை என்பது அதன் வரலாற்றுக்கு மாறாக, பௌத்தர்களால் பெயர் மாற்றப்பட்ட அல்லது வேறுவிதமாகக் கூறப்பட்ட பல தளங்களில் ஒன்றாகும்.

கொழும்பிலிருந்து ஹட்டன் செல்லும் வீதியில் உள்ள கினிகத்தேனை, கரோலினா சந்தியிலிருந்து நோட்டன் பிரிட்ஜ், லக்சபான, மவுசாக்கல ஊடாக நல்லத்தண்ணி எனும் மலையடிவாரத்தை சென்றடைந்து, அங்கிருந்து கால்நடையாக படிகளில் ஏறி மலைக்கு செல்ல முடியும். இதுவே இந்த மலையை அடைய இலகுவான வழியாகும்.

அத்துடன், கொழும்பிலிருந்து இரத்தினபுரிக்குச் செல்லும் வழியில் உள்ள குருவிட்ட என்னுமிடத்திலிருந்து கிழக்கு நோக்கி எக்னெலிகொட, எம்புல்தெனிய, குருளுவான ஊடாக பாலபெத்தலே என்னுமிடத்தை அடைந்து அங்கிருந்து கால்நடையாக மலைக்கு செல்லவும் முடியும்.




"நான்கு மதத்தினரும் தத்தமது தெய்வங்களாக நினைத்து ஒற்றுமையாக வழிப்படும் சிவனொளிபாதமலை போன்ற இன்னொரு இடம் உலகில் எங்குமே இல்லை. கி.பி 399 - 412 காலப்பகுதியில் பௌத்த நூல்களைத் தேடி நேபாளம், இந்தியா, மற்றும் இலங்கைக்கு இந்தியப் பெருங்கடல் வழியாகப் பயணம் மேற்கொண்ட சீனாவைச் சேர்ந்த பௌத்தத் துறவியான பாஹியான் ( Fa-hsien - கிபி 337 - கி. 422) , மற்றும் மொரோக்கோ நாட்டைச் சேர்ந்த இப்னு பதூதா (Ibn Battuta-1304-1369) என்றழைக்கப்படும் அபு அப்துல்லா முகமது இபின் பதூதா ஆகியோரின் குறிப்புகளில் சிவனொளிபாத மலை, அனைத்து மதங்களை சேர்ந்தவர்களும் ஒற்றுமையுடன் வழிபடும் இடமாக குறிப்பிடப்பட்டு உள்ளது. விஞ்ஞான அல்லது தொல்பொருள் ரீதியாக எந்தவித ஆதாரங்களும் இல்லாது இருந்தாலும், பலநூறு ஆண்டுகளாக இலங்கையின் உள்ள அனைத்து இன மக்களாலும் ஒற்றுமைடன் வழிபட்டு வரப்பட்ட சிவானொளிபாத மலை, பௌத்த பேரினவாத சக்திகளின் இனவாத போக்கு காரணமாக திட்டமிட்ட பௌத்த மயமாக்களின் ஊடாக பிரச்சினைக்கு உரிய ஒன்றாக மாறி இருக்கின்றது." என்கிறார் ஆய்வாளரும், எழுத்தாளரும், இலங்கையின் வரலாறு தொடர்பில் பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டு எழுதிவரும் ஊடகவியலாளர் என். சரவணன்.

இம்மலையில் புராதன காலத்தில் சிவனாலயம் அமைந்திருந்ததாகவும், லிங்க வழிபாடு நிலவிய காலத்திலிருந்து இம்மலையை இந்துக்கள் தமது புனித மலையாகக் கருதி வழிபட்டு வருவதாகவும் அங்குள்ள மக்களிடம் பேசும்போது அறியக்கூடியதாக இருந்தது.


சிவனுக்கு சூரிய வழிபாடு செய்வது என்பது இந்து மதத்தின் தொன்மையான வழிபாடாகும். இம்மலை உச்சியில் விசாலமான, மனித உருவிற்கு அப்பாற்பட்ட ஒரு பாதச்சுவடு காணப்படுகின்றது. இப்பாதத்தை இந்துக்கள் சிவனின் பாதச்சுவடு எனக்கருதி வழிபடுகிறார்கள். இதன் காரணமாக இது 'சிவனடிபாதம்' எனவும் அழைக்கப்படுகிறது. இதேவேளை, அது இராவணனின் அடிச்சுவடு என்று சிலர் கூறினாலும் அதற்குப் போதிய ஆதாரம் இல்லை.

"ஆரம்பத்தில் இந்துக்களின் வழிபாட்டுத்தலமாக சிவனொளிபாதம் இருந்தபோதும் காலத்துக்குக் காலம் பௌத்தர்களின் ஆதிக்கத்தின் கீழும் இருந்துள்ளது. மீண்டும் இந்துக்களின் செல்வாக்கு மேலோங்கியும் காணப்பட்டுள்ளது. 1345 இல் அரேபிய யாத்திரிகரான இபின் பதூதா இலங்கைக்கு வந்தபோது சிவனொளிபாதம் ஆரியச் சக்கரவர்த்தியின் ஆதிக்கத்தில் இந்து மதத்தின் செல்வாக்கு பெற்ற இடமாக இருந்துள்ளது. இபின் பதூதா மலையைத் தரிசிக்க ஆரியச் சக்கரவர்த்தியிடம் விருப்பம் தெரிவித்தபோது 15 பிராமணர்களையும், 4 யோகிகளையும், உதவிக்கு மேலும் 50 பேரையும் மன்னன் அவருடன் அனுப்பி வைத்ததாகவும், மலையில் இஸ்லாமியர்களையும், கிறிஸ்தவர்களையும் தான் கண்டதாகவும் இபின் பதூதா தனது குறிப்பில் தெரிவித்துள்ளார்." என்கிறார் இலங்கையை சேர்ந்த வரலாற்று ஆய்வாளர் என்.கே.எஸ். திருச்செல்வம்.

பௌத்தமதம் இலங்கைக்கு அறிமுகமாவற்கு முன்பிருந்தே சிவனொளிபாத மலையில் இந்துக்கள் வழிபாடு நடத்தி வந்தனர். புத்தபகவான் இலங்கைக்கு மூன்று தடவைகள் விஜயம் செய்ததாக பாளி நூல்கள் கூறுகின்றன. இதில் முதல் தடவை இலங்கைக்கு வந்தபோது சிவனொளிபாதமலை இலங்கையின் முக்கிய வழிபாட்டுத் தலமாக விளங்கியிருந்தது. இம்மலையில் மகாசுமன் எனும் தேவகுமாரன் இருந்ததாகவும் அவனுக்கு பௌத்த நெறிகளைப் போதிக்க வேண்டியே புத்தபகவானின் முதல் விஜயம் அமைந்திருந்தாகவும் பாளி நூல்கள் கூறுகின்றன.

எனினும், சிவனொளிபாத மலையிலுள்ள பாதம் புத்த பகவானுடையது அல்ல என்பது ஆராய்ச்சியாளர்கள் ஏற்றுக்கொண்ட முடிவாகும். ஏனெனில் புத்த பகவான் இலங்கைக்கு வரவில்லை என்பதே பல ஆய்வாளர்களின் ஏகோபித்த கருத்தாகவுள்ளது. புத்த பகவான் இந்திய கரையை ஒருபோதும் கடந்ததில்லை எனவும் இந்தியாவின் விந்திய மலைகளுக்கு தெற்கே ஒருபோதும் வரவில்லை எனவும் ஆய்வாளர்கள் பலர் கூறியுள்ளனர். சமகால இந்திய நூல்களிலும் இலக்கியங்களிலும் புத்த பகவான் இந்தியாவிற்கு வெளியே சென்றமை பற்றிய எந்தக் குறிப்புக்களும் காணப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தொடரும்



மிருகக்காட்சிச்சாலையில்

# ஒரு நாள் போதாது



பிரியங்கா சதீஸ்குமார்
ஊடகக்கற்கைகள் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

**அன்றொரு நாள் நானும் என் அம்மாவும் கொழும்பு சென்றிருந்தோம். அம்மா தன்னுடைய அலுவல் காரணமாக கொழும்பு செல்லும்போது நானும் வருகின்றேன் என அடம்பிடித்துச் சென்றேன். காரணம் இதுவரைக்கும் கொழும்பு சென்றதில்லை என்பதால் தான். மிகவும் ஆர்வத்துடன் என் பயணம் பஸ்ஸில் தொடங்கியது. அப்பா எங்களை வழி அனுப்பி வைக்க நானும் என் அம்மாவும் இரவு நேரத்தில் ஒரு எட்டு மணி அளவில் சென்றோம்.**





எனக்கு Night view என்றால் மிகவும் பிடிக்கும். அதனால் எப்போதும் ஜன்னலோர இருக்கையே அதிகம் விரும்புவேன். அன்று அதிர்ஷ்டவசமாக ஜன்னலோர இருக்கை கிடைக்கப்பெற்றதும் நான் வெளியில் தலையை நீட்டிப் பார்த்துக் கொண்டும், அவ்வப்போது அம்மாவின் மடியில் தூங்கிக் கொண்டும் சென்று கொண்டிருந்தேன்.

அங்கு சென்ற பின் அம்மா தனது அலுவல்களை முடித்த பிறகு எங்காவது செல்வோம் என நான் அடம்பிடிக்க சரி செல்வோம் என அம்மா கூற என் மண்டையில் தெஹிவளை மிருகக்காட்சிச் சாலை உடனே வந்து போனது.

சரி என்று கூறி அடுத்த நாள் காலை 8.30 மணி அளவில் கூட்டிச்சென்றார்.

என்னுள் ஆர்வமானது பொங்கி வழிந்து கொண்டிருந்தது. தெஹிவளை மிருகக்காட்சிச் சாலைக்குள் உள்நுழையும் போது அங்கிருந்த கூடத்தில் மக்கள் டிக்கெட் வாங்கிக் கொண்டிருக்க, நாங்களும் இரண்டு டிக்கெட்களை வாங்கி உள்சென்றோம்.

அங்கு காணப்படும் உயிரினங்களை பார்ப்பதற்கு முன் ஒவ்வொரு உயிரினங்களுக்கும் ஒவ்வொரு இலக்கங்களிடப்பட்டு இருந்ததை காண்டோம். அதுவே ஒவ்வொரு உயிரினங்களையும் பார்வையிட வழி செய்தது. முதலாவதாக என் கண்களில் நாரைகள் தான் தென்பட்டன. அவற்றின் கால்கள் மிக உயரமாக இருந்தது. அதை நான் கொண்டு சென்ற என் கமராவில் பதிவு செய்தேன்.

அதுக்குப் பிறகு குகை போன்ற இடத்தில் உள்நுழைந்தோம். அங்கு விதவிதமான மீன்கள் ஒவ்வொரு நிறங்களிலும் காணப்பட்டன. பெரிய மீன்களில் இருந்து சிறிய மீன்கள் வரை அனைத்து விதமான மீன்களும் தொட்டிகளில் வைக்கப்பட்டிருந்தன.

செல்லும் வழிகளில் ஒவ்வொரு உயிரினங்களினது பெயரும் தமிழ், ஆங்கிலம், சிங்களம் என மூன்று மொழிகளிலும் போடப்பட்டிருந்தன.

அதன் வழியே சென்று பார்த்துக் கொண்டிருந்தோம். அதற்கு அடுத்ததாக சில நீர்யானைகள் உறங்கிக் கொண்டும், சிலது எழுந்து நடமாடியபடியும் இருந்தன. அதன் பிறகு பறவைகள் பகுதிக்கு சென்றிருந்தோம்.

அங்கு விதம் விதமான பறவைகள் காணப்பட்டன. பஞ்சவர்ணக்கிளிகள், குயில்கள், மயில்கள், கிளிகள் என பறவைகள் காணப்பட்டன.

நான் இதுவரைக்கும் பார்த்திராத பறவைகளையும் கண்டு ரசித்தேன். அவற்றையும் என் கமராவில் பதிவு செய்து கொண்டேன். அதற்குப் பிறகு மனித இனத்தின் முதல் அங்கமான குரங்கு இனமான சிம்பன்சி மற்றும் கொரில்லா ஆகியவற்றையும் கிட்ட இருந்து இரசிக்கக்கூடிய வாய்ப்பு எனக்கு கிடைத்தது.

அதன் பிறகு படங்களில் பார்த்து வந்த சில மிருகங்களை பார்த்தேன். சிங்கம் ஒன்று தனது கர்ஜனை சத்தத்துடன் எழும்பி நடந்து கொண்டிருந்தது. அந்த சத்தத்தில் என் மனமானது பதறியது. அதன் அருகில் புலியை கண்டதும் எனக்கு ஒரு கணம் மெய் சிலிர்த்து. குறிப்பாக எனக்கு பயங்கரமான விலங்குகள் என்றால் மிகவும் ஆர்வம். அதனால் அவற்றையும் பதிவு செய்தேன்.

> **"இதுவரைக்கும் பார்த்திராத பறவைகளையும் கண்டு ரசித்தேன். அவற்றையும் என் கமராவில் பதிவு செய்து கொண்டேன். அதற்குப் பிறகு குரங்கு இனமான சிம்பன்சி மற்றும் கொரில்லா ஆகியவற்றையும் கிட்ட இருந்து இரசிக்கக்கூடிய வாய்ப்பு எனக்கு கிடைத்தது**

அதன் பிறகு முதலை மற்றும் பல வகையான பாம்புகளின் பார்வையிட்டேன்.

அங்கிருந்த நாக பாம்பானது தலையை நீட்டி படம் எடுத்த வண்ணமே இருந்தது. அவை ஒவ்வொன்றும் கண்ணாடிப் பெட்டிக்குள் இருந்ததனால் அவற்றை பதிவு செய்ய முடியாமல் போய்விட்டது.

இறுதியாக கவரி மான், கங்காரு, மாடு, வரிக்குதிரை, ஒட்டகச்சிவிங்கி, கரடி போன்ற பல மிருகங்களை பார்த்துவிட்டு மதியம் 2:30 மணி அளவில் மிகுந்த பூரிப்போடு மிருகக்காட்சி சாலையை விட்டு என் அம்மாவோடு வெளியேறினேன்.

ஜப்பான்

வாழைப்பழத் தோலால் தாக்கிய

# கணவர் கைது

ஜப்பானில் மனைவியை வாழைப்பழத் தோலால் அடித்து தாக்கிய கணவர் கைது செய்யப்பட்டுள்ள சம்பவம் சமூக வலைதளங்களில் பரவி வருகிறது.

இது குறித்து ஜப்பானின் ஃபுகுவோகாவில் உள்ள குராத்தே பகுதி பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதையடுத்து கணவர் கைது செய்யப்பட்டார்.

கணவர் மது அருந்திவிட்டு தன்னை துஷ்பிரயோகம் செய்து வாழைப்பழத்தோலை வீசியதாக மனைவி முறைப்பாடு செய்துள்ளதாகவும் பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில், வாழைப்பழத்தோலால் மனைவியை தாக்கியதை கணவன் ஏற்றுக்கொண்டுள்ளதாகவும் மனைவி முறைப்பாடு செய்துள்ளார்.



"தனது மனைவி தனக்கு எதிராக பேசியதால் ஆத்திரமடைந்ததாகவும், இதனால் மனைவியை வாழைப்பழத்தோலால் தாக்கியதாகவும் அவர் கூறினார்.

மேலும், தன்னைப் பொறுத்த வரையில் இது வன்முறையல்ல என கணவர் பொலிஸ் நிலையத்தில் அதிகாரிகளிடம் தெரிவித்த நிலையில், "ஒருவரைப் பொருளால் அடிப்பது குற்றம்" என்றும் வாழைப்பழத்தால் அடிப்பது கூட குற்றம் என்றும் அவரிடம் பொலிஸார் கூறியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வொஷிங்டன்



"காசாவில் நடப்பது இனப்படுகொலை அல்ல"

## அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன்

காசாவில் நடப்பது இனப்படுகொலை அல்ல என்றும், ஹமாஸ் தோற்கடிக்கப்பட வேண்டும் என்றும் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

வெள்ளை மாளிகையில் நடைபெற்ற யூத - அமெரிக்க பாரம்பரிய மாத நிகழ்வில் பேசிய ஜோ பைடன், "காசாவில் ஹமாஸ் போராளிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கையில், இஸ்ரேலியப் படைகள் இனப்படுகொலை செய்யவில்லை. காசாவில் நடப்பது இனப்படுகொலை அல்ல. இனப்படுகொலை நடப்பதாக மேற்கொள்ளப்படும் பிரச்சாரத்தை நாங்கள் நிராகரிக்கிறோம்.

ஹமாஸ் அமைப்பால் பாதிக்கப்பட்ட நாடு இஸ்ரேல். அக்டோபர் 7ஆம் திகதி நடத்தப்பட்ட தாக்குதலில் 1,200 பேரைக் கொன்று நூற்றுக்கணக்கான பிணைக் கைதிகளைப் பிடித்துச் சென்றவர்கள் ஹமாஸ் போராளிகள். இஸ்ரேலியர்களின் பாதுகாப்புக்கான அமெரிக்காவின் ஆதரவு என்பது இரும்புக் கவசத்தைப் போன்றது.

ஈரான்

ஈரானின் புதிய ஜனாதிபதி

## தேர்தல் திகதி அறிவிப்பு



ஈரான் முன்னாள் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி மற்றும் வெளியுறவு மந்திரி ஹொசைன் அமீர்-அப்துல்லாஹியன் உட்பட அவருடன் வந்த முக்கிய அரசு உறுப்பினர்கள் ஹெலிகொப்டர் விபத்தில் உயிரிழந்திருந்த நிலையில் ஜனாதிபதி தேர்தலுக்கான அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இந்நிலையில் அந்நாட்டின் 14வது ஜனாதிபதி தேர்தல் ஜூன் 28ஆம் திகதி நடைபெறும் என அந்நாட்டு அரசு முடிவு செய்துள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஜனாதிபதி முகமது மொக்பர், நிதித்துறைத் தலைவர் கோலம்ஹோசைன் மொஹ்செனி-எஜே மற்றும் பாராளுமன்ற சபாநாயகர் முகமது பாக்கர் கலிபாஃப் மற்றும் சட்ட விவகாரங்களுக்கான துணைத் தலைவர் முகமது டெஹ்கான் மற்றும் பிரதிநிதிகள் கலந்து கொண்ட கூட்டத்தில் தேர்தல் திகதி தீர்மானிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈரானின் அரசியலமைப்பின் 131வது பிரிவின்படி, ஜனாதிபதி தனது கடமைகளை நிறைவேற்ற முடியாவிட்டால், துணை ஜனாதிபதி அவரின் கடமைகளைச் செய்ய அதிகாரமுடையவர் ஆவார்.

மேலும், அதிகபட்சமாக 50 நாட்களுக்குள் புதிய ஜனாதிபதியைத் தேர்ந்தெடுப்பதற்கான ஏற்பாடுகளை செய்ய இடைக்கால ஜனாதிபதி கடமைப்பட்டவர் ஆவார். இந்நிலையில், இப்ராஹிம் ரைசியின் மறைவுக்கு பல நாடுகளும் நேற்று (21) துக்க தினம் அனுசரித்தது குறிப்பிடத்தக்கது.

புனே

விபத்து ஏற்படுத்திய சிறுவனுக்கு

## கட்டுரை எழுத நிபந்தனை



புனேவில் 17 வயதான சிறுவன், கார் ஓட்டி விபத்து ஏற்படுத்தியதில் இருவர் உயிரிழந்த நிலையில், அச்சிறுவனுக்கு 300 சொற்களில் கட்டுரை எழுதும்படி நிபந்தனை ஜாமீன் வழங்கியுள்ள சம்பவம் பெரும் விமர்சனங்களை பெற்றுவருகிறது.

மகாராஷ்டிரா மாநிலம், புனேவில், கல்யாண் நகர் பகுதியில் கடந்த 19ஆம் திகதி அதிகாலை அன்று இந்த விபத்து நடந்துள்ளது.

சம்பவத்தன்று குறித்த பகுதியில், 12 ஆம் வகுப்பு படிக்கும் சிறுவன் ஒருவர், மதுபோதையில் அதிவேகமாக காரை ஓட்டி வந்துள்ளார். ஒரு கட்டத்தில் கார் கட்டுப்பாட்டை இழந்த நிலையில், காரின் முன்னாள் சென்ற இருசக்கர வாகனத்தில் பயணித்த தம்பதியின் மீது மோதியுள்ளது.

இந்த விபத்தில், அவர்கள் இருவரும் பரிதாபமாக உயிரிழந்தனர். இதனை கண்ட அப்பகுதி மக்கள் உடனே அந்த சிறுவனை பிடித்து சரமாரியாக தாக்கி, பொலிஸில் ஒப்படைத்த நிலையில், சம்பந்தபட்ட சிறுவன், அவரின் தந்தை மற்றும் அவருக்கு மதுபானம் வழங்கிய மதுபான சாலை மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், இவ்வழக்கை விசாரித்த நீதிபதி ஒரு சில நிபந்தனைகளுடன் அச்சிறுவனுக்கு 15 மணி நேரத்திலேயே ஜாமீன் வழங்கியுள்ளார்.

நீதிபதி கொடுத்த நிபந்தனைகள் என்னவென்றால், "ஏர்வாடா போக்குவரத்து காவலர்களுடன் 15 நாட்கள் போக்குவரத்து பணியாற்ற வேண்டும், மற்றும் சாலை விபத்தின் விளைவுகள் என்ற தலைப்பில் 300 வார்த்தைகளில் கட்டுரை எழுத வேண்டும். குடிப்பழக்கத்தை கைவிட மனநல ஆலோசனையுடன் கூடிய சிகிச்சை எடுக்க வேண்டும்" என்பதுதான்.

இந்தவகையில், இரு உயிர்களை பறித்த பிறகும் வெறும் 300 வார்த்தைகளில் கட்டுரை எழுதுவது எந்த வகையில் தண்டனையாக அமையும் என்று பலர் கடுமையாக விமர்சித்து வருகின்றனர்.



ராஜஸ்தான்

ராஜஸ்தான் முன்னாள் அமைச்சர்

## மனைவி, மகன் மீது புகார்

ராஜஸ்தான் மாநிலத்தின் முன்னாள் அமைச்சரும், பரத்பூர் அரச குடும்பத்தைச் சேர்ந்தவருமான விஸ்வேந்திர சிங், தன்னை தனது மகனும் மனைவியும் கொடுமைப்படுத்தியதாகக் கூறி மனுத் தாக்கல் செய்துள்ளார்.

அந்த புகாரில், "எனது மனைவியும், எனது மகனும் என்னை சொத்துக்காக அடித்து துன்புறுத்துகின்றனர். நான் ஒரு இருதய நோயாளி. ஆகையால் சிறு கவலையை கூட என்னால் தாங்கிக்கொள்ள முடியாது. 2021-22ஆம் ஆண்டுகளில் எனக்கு கொரோனா வந்த சமயம் எனது மனைவியும் எனது மகனும் என்னை கவனித்துக்கொள்ளவில்லை. எனக்கு பணிபுரிந்து வந்த வேலையாட்களை கூட நிறுத்திவிட்டனர். ஆனால் எனது தந்தையின் சொத்துகளில் உரிமை கோருகின்றனர். அத்துடன் நிறுத்தாமல் எனது அறைகளிலிருந்து பொருட்களை வெளியே எறிந்ததுடன், எனது ஆடைகளுக்கு தீ வைத்து கொளுத்தினர்.

எனது ஆவணங்கள் பதிவுகள் ஆகியவற்றை கிழித்து கிணற்றில் எறிந்தனர். எனக்கு உணவு, தண்ணீர்கூட கொடுக்காமல், என்னை அடித்து துன்புறுத்தினர்.

இங்கிலாந்து எதிர் பாகிஸ்தான்:

# இன்று ஆரம்பிக்கிறது தொடர்



இங்கிலாந்து, பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான நான்கு போட்டிகள் கொண்ட இருபதுக்கு T20 சர்வதேசப் போட்டித் தொடரானது, லீட்ஸில் இன்று (22) இரவு 11 மணிக்கு நடைபெறவுள்ள முதலாவது போட்டியுடன் ஆரம்பிக்கின்றது.

பாகிஸ்தான் அணியானது சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு T20 உலகக் கிண்ணத் தொடருக்கான தமது குழாமை இன்னும் அறிவிக்காத நிலையில், அதற்குரிய இறுதிக் களமாக இப்போட்டி காணப்படுகின்றது.

தவிர இங்கிலாந்து போன்ற பலமான அணிக்கெதிராக அஸாம் கான், இர்ஃபான் கான், சைம் அயூப், உஸ்மான் கான், அக்ஹா சல்மான், அப்பாஸ் அஃப்ரிடி, அப்ரார் அஹ்மட் ஆகியோர் எவ்வாறு செயற்படுகின்றனர் என்பதையும் பாகிஸ்தான் அறிந்து கொள்ள முடியும்.

இதேவேளை உபாதையிலிருந்து குணமடைந்த பின்னர் ஹரிஸ் றாஃப்பின் பந்துவீச்சையும் கண்காணிக்க முடியும்.

மறுபக்கமாக இதே போலவே நீண்ட கால உபாதையிலிருந்து குணமடைந்துள்ள ஜொஃப்ரா ஆர்ச்சர் எவ்வாறு செயற்படுகிறார் என்பதை இங்கிலாந்து அறிந்து கொள்ள முடியும்.

இதுதவிர இந்தியன் பிறீமியர் லீக்கில் பங்கேற்காத பென் டக்கெட், ஹரி ப்ரூக், டொம் ஹாட்லி, கிறிஸ் ஜோர்தான், அடில் ரஷீட் ஆகியோர் எவ்வாறு பெறுபேற்றை வெளிக்காட்டுகின்றனர் என்பதன் மூலம் உலகக் கிண்ணத்துக்கான தமது இறுதிப் பதினொருவர் அணியை இங்கிலாந்து இறுதி செய்து கொள்ள முடியும்.

# "நடப்பு சீசன் நமக்கு ஏமாற்றமே"

### மும்பை இந்தியன்ஸ் அணியுடன் நீட்டா அம்பானி பேச்



நடப்பு ஐபிஎல் சீசன் தங்கள் அணிக்கு ஏமாற்றம் அளிக்கும் வகையில் அமைந்ததாக மும்பை இந்தியன்ஸ் அணியின் உரிமையாளர் நீட்டா அம்பானி, அணி வீரர்களுடனான கலந்துரையாடலில் தெரிவித்துள்ளார்.

ஐபிஎல் அரங்கில் ஐந்து முறை சாம்பியன் பட்டம் வென்ற அணி என்ற சாதனையை முதலாவதாக படைத்த அணி மும்பை இந்தியன்ஸ். நடப்பு ஐபிஎல் சீசனில் அணியின் தலைவர் பொறுப்பை ஹர்திக் பாண்டியா வசம் ஒப்படைத்தது அணி நிர்வாகம். அணியின் முன்னாள் தலைவர் ரோகித் சர்மா, தொடக்க ஆட்டக்காரராக விளையாடி இருந்தார்.

## லிவர்பூலின் முகாமையாளராக அர்னே ஸ்லொட்



இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான லிவர்பூலின் முகாமையாளராக அர்னே ஸ்லொட் உறுதிப்படுத்தப்பட்டுள்ளார்.

நெதர்லாந்துக் கழகமான பெய்னூர்ட்டின் முகாமையாளராக ஸ்லொட், மூன்றாண்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டதாகக் கூறப்படுகிறது.



இத்தாலிய சீரி ஏ தொடர்:

# சமநிலையில் ஜுவென்டஸ் பொலொக்னா போட்டி

இத்தாலியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான சீரி ஏ தொடரில், பொலொக்னாவின் மைதானத்தில் செவ்வாய்க்கிழமை (21) நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை ஜுவென்டஸ் 3-3 என்ற கோல் கணக்கில் சமப்படுத்தியது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை 22, மே 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.